உ

சிவமயம்

போற்றி மாலை

ஆசிரியர்

''தமிழ்க்கடல்'', ''வண்கவிவள்ளல்'',
''சிவமணி'', ''சிவம்பெருக்கும்சீலர்''

ராய. சொ.

வெளியீடு


ராம. அழ. ராம. இராமனுதன் செட்டியார்
சாந்தி

விரோதிகிருது, தை – ௰௫ (29 – 1 – 72)


உ

சிவமயம்

உள்ளுறை



ராம. அழ. ராம. இராமநாதன் செட்டியார் - சோலைச்சி ஆச்சி



உ

சிவமயம்

நூல் முகம்

தமிழில் கடவுளர்களை அருச்சிக்க, 'போற்றி' செய்து தரும்படி தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் பணித்தார்கள். அவர்கள் விருப்பப்படி செய்து கொடுத்தேன். தெய்விகப் பேரவையின் சார்பாக அவைகள் தனித்தனியாக வெளி வந்தன.

1. விநாயக வணக்கம்; 2. முருக வணக்கம்; 3. சிவ வணக்கம்; 4. அம்பிகை வணக்கம்; 5. திருமால்வணக்கம்; 6. தாயார் வணக்கம்; 7 சேக்கிழார் வணக்கம், ஆகிய ஏழும் சேர்ந்தது இவ்வெளியீடு.

இவ்வணக்கங்களில் தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்தத்திலுள்ள வரிகளும் கருத்துக்களும், பிற்காலச்

சான்றோர்கள் அருளிய மொழிகளும் நிறைய எடுத்து ஆளப்பெற்றிருக்கின்றன.

அந்தந்தக் கடவுளர்க்குரிய சிறப்பியல்பு அங்கங்கு மொழியப்பெற்றிருக்கின்றன. விநாயக வணக்கத்தில், விநாயகக் கடவுள் எளிமையாக எங்கும் அமர்ந்து, கண்டோர்க்குக் காட்சிதரும் இயல்பு பரக்கப் பேசப் பெற்றிருக்கின்றது. ஒவ்வொன்றிலும் 108 போற்றிகள் அமைந்திருக்கின்றன.

முருக வணக்கம் தாண்டக யாப்பில் எண்சீர் விருத்தமாக, பதினொரு பாடல்களால் அமைந்திருக் கின்றது. முறைப்படி முருகனுக்குரிய ஆறுபடை வீட்டைச் சொல்லித் தொடங்குகின்றது. அருணகிரி நாதரின் சொற்றொடர்கள் பல இடம் பெற்றிருக்கின்றன.

சிவ வணக்கம் அகர வரிசையில் ஆக்கப்பெற்றிருக் கின்றது. ‘அம்பலத்து ஆடும் அரனே! போற்றி!, என்று தொடங்கி, ‘வையகம் வாழ்வே போற்றி! போற்றி!!, என

நிறைவு எய்துகின்றது. சிவனுக்குரிய முழுமுதல் தன்மை பெரிதும் பேசப்பெற்றிருக்கின்றது.

அம்பிகை வணக்கம் பல்வேறு கோவில்களிலும் அருள் வடிவம் கொண்டிருக்கும் அம்பிகையின் திருப் பெயர்களை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. குமர குருபரர் போன்ற பெரியார்களின் சொல் தொடர்களைப் பெரிதும் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

திருமால் வணக்கம், சிவ வணக்கத்தைப்போலவே அகர வரிசையில் அமைந்திருக்கின்றது. 'அரங்கம் பள்ளிகொள் அரியே! போற்றி!' என்று தொடங்கி, 'வையகம் உண்டவா போற்றி' போற்றி!!' என முடிவுறு கின்றது. திருமால் வணக்கத்தில் திருமாலுக்குரிய பன்னிரு திருப்பெயர்கள், பத்து அவதாரம், பன்னிரண்டு ஆழ்வார்கள், ஆச்சாரியர்களின் திருப்பெயர்கள், திருமாலைப்பற்றிய புராணச் செய்திகள் இடம்பெற்றிருக் கின்றன.

தாயார் வணக்கத்தில் திருமகளின் அருஞ்செயல்கள், திருமகளால் பெறும் உலகியல் வாழ்வு முதலியன பரக்கப்

பேசப்பெற்றிருக்கின்றன. திருமங்கை மன்னனின் மடல்களைப் பின்பற்றி எல்லா அடிகளும் ஒரே எதுகையில் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

சேக்கிழார் வணக்கம் பெரிய புராண வரலாற்றை முழுதும் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வணக்கத்தில் அறுபான்மும்மை நாயன்மார் திருப்பெயரும் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை முறைப் படி வருகின்றது.

இப் 'போற்றி மாலை' நூலை, என்னிடம் பேரன்பு கொண்ட அன்பர் கோட்டையூர், ராம. அழ. ராம. இராம ஞதன் செட்டியார், தம் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவின் நினைவாக அன்போடு வழங்கி மகிழ்கின்ருர். அன்ஞர் வழி வழி எல்லா நலனும் பெற்றுப் பல்லாண்டு வாழ உண்ணுமுலை உடனுய அண்ணுமலை அண்ணல் அருள்வாராக!

அழகப்பாபுரம்
29 – 1 – 72

ராய. சொ.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

விநாயக வணக்கம்



(108 போற்றி)

சிவமயம்

விநாயக வணக்கம்

வேழ	முகத்து	விநாயக	போற்றி!
பேழை	வயிற்றுப்	பிள்ளாய்	போற்றி!
ஏழைக்கு	அருள்செய்	எம்மான்	போற்றி!
வாழ	வருக்கும்	வள்ளால்	போற்றி!
சிவனுர்	பெறு முதல்	செல்வா	போற்றி!
சேயிழை	உமைதரு	சிறுவா	போற்றி!
திருமால்	தனக்கு	மருகா	போற்றி!
திருமகள்	மகிழுமாப்	பிள்ளாய்	போற்றி!
யானை	உரித்தவன்	மகனே	போற்றி!
யானையைக்	காத்தவன்	மருமான்	போற்றி!
யானையின்	கைபெறு	கோனே	போற்றி!

யானையால்	வள்ளியை	வென்ருய்	போற்றி!
யானை	மணாளனின்	அண்ணு	போற்றி!
யானை	முகத்தனை	அழித்தாய்	போற்றி!
பெருச்சாளி	ஏறும்	பெரியோய்	போற்றி!
பேணுவார்	பிழைகள்	பொறுப்பாய்	போற்றி!
வள்ளிதெய்	வானை	மைத்துன	போற்றி!
வல்லபை	மங்கை	மணாள	போற்றி!
கடிமணம்	விரும்பாக்	கணேச	போற்றி!
மடியினில்	மாதினை	வைத்தாய்	போற்றி!
சித்தி	புத்தியின்	தெய்வமே	போற்றி!
முத்தி	கொடுக்கும்	முதல்வ	போற்றி!
மூலை	முடுக்கெலாம்	முளைத்தாய்	போற்றி!
மூவிரு	முகத்தோன்	முன்னவ	போற்றி!

சிதறுகாய் சிறுவருக்கு ஈவாய் போற்றி!
சிவன்தேர் அச்சினைச் சிதைத்தாய் போற்றி!
கொம்புஎழுத் தாணியாக் கொண்டாய் போற்றி!
எம்பிரான் பிறையதில் இணைத்தாய் போற்றி!
மலையினில் பாரதம் வரைந்தாய் போற்றி!
மலைமகள் மகிழுமா மணியே போற்றி!
முன்வணக் கங்கொள் முனைவ போற்றி!
பன்னிரு தம்பிகண் எண்ணினை போற்றி!
பின்னவன் முழமிடப் பிணங்கினை போற்றி!
அன்னையின் அணைப்பால் ஆறினை போற்றி!
எண்ணுவார் இடரைக் களைவாய் போற்றி!
எண்ணார் இடர்உற இழைப்பாய் போற்றி!
பரமன் மடியுறை பண்ணவ போற்றி!

பார்வதி	ஈன்ற	பாலா	போற்றி!
அப்பம்	அவல்பொறி	கப்புவாய்	போற்றி!
இப்புவி	எல்லாம்	இருப்பாய்	போற்றி!
ஓங்கா	ரப்பொருள்	உணர்த்துவாய்	போற்றி!
தீங்கெலாம்	அகற்றும்	செம்மல்	போற்றி!
குட்டிக்	குனிப்புறக்	கொள்வாய்	போற்றி!
பட்டி	தொட்டிஎலாம்	படர்வாய்	போற்றி!
குளக்கரை	தொறும்குடி	கொண்டாய்	போற்றி!
அளப்பரும்	ஆற்றல்கொள்	அம்மான்	போற்றி!
அரசின்	நிழல்அமர்	அரசே	போற்றி!
பரசுவார்	பவப்பிணி	அறுப்பாய்	போற்றி!
அறுகினை	ஆசையோடு	அணிவாய்	போற்றி!
உறுபெரு	மோதகம்	உவப்பாய்	போற்றி!

உலகீன்ற	கன்னியின்	குலமுதல்	போற்றி!
நலனெலாம்	நம்பர்க்கு	அருள்வாய்	போற்றி!
மலைபோல்	வருதுயர்	மாய்ப்பாய்	போற்றி!
கலையெலாம்	கருத்துள்	வளர்ப்பாய்	போற்றி!
அலகிலா	விளையாட்டு	அயர்வாய்	போற்றி!
உலகெலாம்	அடக்கிய	உந்தியாய்	போற்றி!
மலைமகள்	மடிதவழ்	மைந்தா	போற்றி!
நலம்நுகர்	அவர்திறம்	நகைப்பாய்	போற்றி!
புலவர்க்கு	விருந்தாய்ப்	பொலிவாய்	போற்றி!
கலக	லெனச்சிரூர்க்	கவர்வாய்	போற்றி!
பேரொளி	பரப்பும்	பெருமுடி	போற்றி!
பாரதம்	எழுதிய	ஓர்பிறை	போற்றி!
கூருறும்	மற்றைக்	கொம்பும்	போற்றி!

கார்என	அருள்பொழி	கண் இணை	போற்றி!
நான்மறை	பகர்ந்தருள்	நால்வாய்	போற்றி!
வான்குறை	கேட்டருள்	மாச்செவி	போற்றி!
மோதக	மண நுகர்	மூக்குப்	போற்றி!
போதகப்	புண் ணியப்	பொலிமுகம்	போற்றி!
மண்முழுது	அடக்கிய	வயிறு	போற்றி!
கண் அகல்	உந்திக்	கமலம்	போற்றி!
வாரி	வழங்கு,கை	ஐந்தும்	போற்றி!
சீரியோர்	முடிபடி	திருவடி	போற்றி!
சிவனுர்	கோயிலில்	திகழ்வாய்	போற்றி!
தவமாச்	செல்வர்சொல்	தவமே	போற்றி!
அம்பிகை	கோயிலும்	அமர்வாய்	போற்றி!
நம்பினுர்	துன்பெலாம்	நலிவாய்	போற்றி!

தம்பி	கோயிலும்	தங்குவாய்	போற்றி!
உம்பரும்	போற்றும்	ஒருவ	போற்றி!
காளி	கோயிலும்	காப்பாய்	போற்றி!
ஊழி	தோறும்	உலவாய்	போற்றி!
பெருமாள்	கோயிலும்	பிறங்குவாய்	போற்றி!
திருமால்	தங்கைநற்	செல்வா	போற்றி!
அடியார்	கோயிலும்	அமர்வாய்	போற்றி!
கடிசேர்	அறுகணி	கணபதி	போற்றி!
தனிப்பெருங்	கோயிலும்	சார்வாய்	போற்றி!
மனித்தரைக்	கவர்தரு	வள்ளால்	போற்றி!
எங்கும்	இருக்கும்	இறைவ	போற்றி!
மங்கலம்	தொடங்கமுன்	வருவாய்	போற்றி!
கங்கை	அணிந்தவன்	கனியே	போற்றி!
நங்கை	உமைதரு	புங்கவ	போற்றி!

எளிமையில் அருள்புரி இறைவ போற்றி!
ஏழைகள் பங்கில் இருப்பவ போற்றி!
தும்பிக் கை,பெறு தோன்றல் போற்றி!
தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி!
அறிவு மதம்பொழி ஆனையே போற்றி!
குறைவிலாப் பெருங்குணக் குன்றே போற்றி!
கூத்துடை யான்தரு குமரா போற்றி!
கூத்துகந்து ஆடும் குரிசில் போற்றி!
சந்திதோறு இருக்கும் தத்துவ போற்றி!
சிந்தையுட் புகுந்த தேவா போற்றி!
கணநாத போற்றி! கயமுக போற்றி!
விநாயக போற்றி! விக்கின போற்றி!
எண்ணிய ஈவாய் போற்றி! போற்றி!
புண்ணியப் பிள்ளையார் போற்றி! போற்றி!

———

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முருக வணக்கம்



(108 போற்றி)

உ

சிவமயம்

முருக வணக்கம்

திருத்தாண்டகம் 11. போற்றி 108

திருப்பரங்குன்று இனிதுறையும் செல்வா போற்றி!
    திருச்செந்தூர்ச் சீரலைவாய்த் தேவா போற்றி
திருப்பழநி மலையிருக்கும் தேனே போற்றி!
    திருவேரகச்சாமி நாதா போற்றி!
திருத்தணிகை முதல்மலைகள் திகழ்வாய் போற்றி!
    தீம்பழங்கள் உதிர்சோலை சேர்வாய் போற்றி!
திருப்பொலிய உலகாளும் செம்மால் போற்றி!
    செந்தமிழர் தெய்வமே போற்றி! போற்றி! 1

சொக்கேசர் பெற்றஉயர் தோன்றல் போற்றி!
தொல்உமையாள் ஈன்றெடுத்த சோதி போற்றி!

சக்கரம்கொள் மால்தங்கை தனயா போற்றி!
தத்துவங்கள் கடந்ததனிப் பொருளே போற்றி!

நக்கீரர், பழம்பாட்டை நயப்பாய் போற்றி!
நாவலர்கள் கவிக்கினிய நம்பா போற்றி!

விக்கின விநாயகனுக்கு இளையாய் போற்றி!
வேடர்குல மாப்பிள்ளாய்! போற்றி! போற்றி! 2

அருணகிரி நாவில்நடம் புரிவாய் போற்றி!
அனுபூதி அலங்காரப் புகழாய் போற்றி!

கருணைபொழி பன்னிரண்டு கண்ணா போற்றி!
கார்அனைய கைஈராறு உடையாய் போற்றி!

அருள்சுரக்கும் ஆறுமுகத்து அண்ணல் போற்றி!
ஆலாலம் உண்டகண்டன் பாலா போற்றி!

வெருவுறச்சூர் தடிந்தவடி வேலா போற்றி!
மெய்ஞ்ஞானப் பிள்ளையே போற்றி! போற்றி! ௬

வள்ளியெனும் குறக்கொடியை மணந்தாய் போற்றி!
மணப்பதற்கு மரம்போல நின்ருய் போற்றி!

கொள்ளைகொளும் எழில்அமைந்த குமரா போற்றி!
கும்பிடுவோர் இடர்களையும் குகனே போற்றி!

தெள்ளுதமிழ்ப் பெருங்கடலுள் திளைப்பாய் போற்றி!
தீந்தமிழால் வைதார்க்கும் அருள்வாய் போற்றி!

புள்ளிமயில் ஏறிவரும் புனிதா போற்றி!
புண்ணியம்செய் புண்ணியமே போற்றி! போற்றி! 4

தேவயானையைமணஞ்செய் சிங்கம் போற்றி!
தேவசேனாபதியாத் திகழ்ந்தாய் போற்றி!

தேவயானைக்கிளைய சிறுவா போற்றி!
தேவேந்த்ரன் மருமகனும் செம்மல் போற்றி!

தேவர்சிறை மீட்டருள்செய் தீரா போற்றி!
தேவரெலாம் தொழச்சிறந்த தேவே போற்றி!

தேவாரம் பெறுசிவனார் மைந்தா போற்றி!
தேவாதி தேவனே போற்றி! போற்றி! 5

கந்தா!கு கா!கடப்பந் தாராய் போற்றி!
காதலியர் இருவரையும் பிரியாய் போற்றி!

கொந்தாரும் குறிஞ்சிப்பூந் தொடையாய் போற்றி!
கோழிஎனும் கொடிகொண்ட குரிசில் போற்றி!

செந்தேறல் தினைமாவோடு உண்டாய் போற்றி!
தினைகாத்த சிறுமிமயல் சேர்ந்தாய் போற்றி!

எந்தாயே! எம்அப்பா இறைவா போற்றி!
எழுத்தழிக்கும் இணையடிகள் போற்றி! போற்றி! 6

சரவணத்தில் வந்துதித்த தவமே போற்றி!
சரவணப வா!கார்த்தி கேயா! போற்றி!

முருகனெனும் அழகுஇளமை முதலே போற்றி!
முனிவர்களும் வணங்குகின்ற மூர்த்தி போற்றி!

திருகுகுணத்து அசுரர்விழச் செற்ருய் போற்றி!
தேவர்மறைத் தீவளர்த்த சீரோய் போற்றி!

உருகுமனத்து அடியர்உளத்து உறைவாய் போற்றி!
உறுகிரிகள் உறைபவனே போற்றி! போற்றி! 7

மாம்பழத்துக்கு உலகைவலம் வந்தாய் போற்றி!
மயில்ஏறிக் கணப்பொழுதில் அடைந்தாய் போற்றி!

தீம்பழத்தை அண்ணன்உணக் கண்டாய் போற்றி!
தே,முதல்வன் செய்சூழ்ச்சி அறிந்தாய் போற்றி!

தேம்பதுமப் பிரமன்அஞ்சச் செய்தாய் போற்றி!
சிறையிட்டுப் பொருள்கூறும் செவ்வாய் போற்றி!

காம்பறிதோள் கயற்கண்ணி கண்ணே போற்றி!
கட்டழகுக் கடவுளே! போற்றி! போற்றி! 8

உலகீன்ற ஒருகன்னி மகனே போற்றி!
ஊழிமுதல் சிவன்தந்த ஒருவ போற்றி!

பலகலையும் உணர்அறிவுப் பழமே போற்றி!
பன்னிரண்டு கண்,கைகள் படைத்தாய் போற்றி!

மலர்ஆறு முகங்கொண்ட வள்ளால் போற்றி!
வள்ளிமலர் அடிவணங்கும் மணாளா போற்றி!

மலைபிளக்க வேல்எறிந்த மன்னா போற்றி!
மயில்ஏறும் பெருமானே போற்றி! போற்றி! 9

கடல்வற்ற வேல்விட்ட கடம்பா போற்றி!
கார்அவுணக் கடல்குடித்த காளாய் போற்றி!

குடல்சரியச் சூரன்உரம் குடைந்தாய் போற்றி!
குன்றமெலாம் குடிகொண்ட குழவி, போற்றி!

மடவர்மார் வயிற்றில்தீ வைத்தாய் போற்றி!
மறைவகுத்த மகத்தீயை வளர்த்தாய் போற்றி!

படஅரவில் துயில்மாயோன் மருகா போற்றி!
பாம்பணிந்த பரன்மகனே போற்றி! போற்றி!

மருவினிய மலர்ப்பாதம் போற்றி! போற்றி!
மாவீரச் சிலம்புக்கால் போற்றி! போற்றி!

பொருவரிய பொன்னின் இடை போற்றி! போற்றி!
போர்வல்ல, வரைமார்பம் போற்றி! போற்றி!

தருகொடைக்கை பன்னிரண்டும் போற்றி! போற்றி!
தாயெனும்சீர் முகம்போற்றி! போற்றி! போற்றி!


அரன்மகிழ மறைபுகல்வாய் போற்றி! போற்றி!
அருட்கண்கள் போற்றியோ! போற்றி! போற்றி!

உ


சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவ வணக்கம்



(108 போற்றி)



சிவமயம்

சிவ வணக்கம்

அம்பலத்து ஆடும் அரனே! போற்றி!
ஆனைமா முகனை அளித்தவ போற்றி!
இளைய முருகனை ஈன்றாய் போற்றி!
ஈறிலாப் பெருவாழ்வு ஈவாய் போற்றி!
உமைக்கொரு கூறளி உத்தம போற்றி!
ஊழி முதல்வ! நின் ஒண்கழல் போற்றி!
எந்தையும் யாயுமாய் இயைந்தனை போற்றி!
ஏழை பங்க! நின் இணையடி போற்றி!
ஐயா! அரசே! அமுதே போற்றி!
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி!
ஓசையாய்ப் பொருளாய் ஒன்றினை போற்றி!

ஔவிய	நெஞ்சினர்க்கு	அரியாய்	போற்றி!
அஃகம்	வளர	அருள்வாய்	போற்றி!
கல்ஆல்	அமர்ந்த,சொற்	கடந்தவ	போற்றி!
":ங"ப்போல்	வளைய	நவில்வாய்	போற்றி!
சடையாய்	விடையாய்	உடையாய்	போற்றி!
ஞயமாய்	உரைதர	நயப்பாய்	போற்றி!
மடம்படு	வாழ்வை	மாய்ப்பாய்	போற்றி!
வணங்கத்	தலையை	வைத்தாய்	போற்றி!
தழுவக்	குழைந்த	தண்ணளி	போற்றி!
நச்சரவு	ஆட்டிய	நம்பி	போற்றி!
பந்தணை	விரலாள்	பங்க	போற்றி!
மண்டிய	தழல்நிற	வண்ண	போற்றி!
மயல்கெடுத்து	ஆளும்	மணள	போற்றி!
அரவம்	அணிந்த	அந்தண	போற்றி!

நிலம், தீ வான் கால்! நீரே போற்றி!
வண்கவி வள்ளல்கள் வள்ளால் போற்றி!
மழவிடை ஏறும் மன்ற போற்றி!
அளவெலாம் கடந்த ஐயா போற்றி!
பிறப்பு இறப்பு இல்லாப் பெரும போற்றி!
மனமாசு அறுசிவ மணியே போற்றி!
கற்றவர் உண்ணும் கனியே போற்றி!
காலனை உதைத்தருள் கழற்கால் போற்றி!
கிழவா இளையாய் குழவி போற்றி!
கீழ்மேல் உலகெலாம் கிளர்ந்தாய் போற்றி!
குழவி மதியணி குழகா போற்றி!
கூத்துகந்து ஆடும் கொற்றவ போற்றி!
கெடுதல் தவிர்த்துஆள் கேடிலி போற்றி!
கேதம் கெடுத்த கிளர்ஒளி போற்றி!

கைலைசேர்	முழுமுதற்	கடவுளே	போற்றி!
கொல்புலித்	தோல்உடைக்	கோமான்	போற்றி!
கோதறு	நற்குணக்	குன்றே	போற்றி!
சந்தனச்	சாந்தின்	சுந்தர	போற்றி!
சாதிகள்	கடந்த	தத்துவ	போற்றி!
சிலையால்	எயில்எரி	சேவக	போற்றி!
சீருடைச்	சிவபுரத்து	அரசே	போற்றி!
சுந்தரன்	தனைத்தடுத்து	ஆண்டவ	போற்றி!
சூது, பொய்	களவு	தொலைப்பாய்	போற்றி!
செந்தமிழ்	தந்த	செம்மலே	போற்றி!
சேக்கிழார்	தீந்தமிழ்	திளைப்பாய்	போற்றி!
சைவம்	தழைக்கநில்	தவமே	போற்றி!
சொல்லும்	பொருளுமாம்	தூமணி	போற்றி!
சோதியுள்	சோதியாய்த்	துலங்குவாய்	போற்றி!

ஞானசம் பந்தனை நயந்தாய் போற்றி!
ஞிமிறுசேர் கொன்றை நீள்சடை போற்றி!
ஞேயநல் அடியார் நினைவே போற்றி!
தண்தமிழ்ச் சங்கத் தலைவா போற்றி!
தாயே தாதாய் சங்கரா போற்றி!
திருவா சகம்பெறு செல்வா போற்றி!
தீஞ்சுவைக் கவிஞர்பாத் தேனே போற்றி!
துரியம் கடந்த தொல்லோய் போற்றி!
தூக்கிய திருவடிச் சோதி போற்றி!
தென்னாடு உடைய சிவனே போற்றி!
தேவா ரம்நுகர் செவியாய் போற்றி!
தையலைத் தலைக்கொள் சதாசிவ போற்றி!
தொண்டர் உளம்அமர் தூயோய் போற்றி!
தோலும் துகிலும் புனைவாய் போற்றி!

நதிசேர்	செஞ்சடை	நம்பா	போற்றி!
நாற்றிசை	விளக்காம்	நாதா	போற்றி!
நினைப்பவர்	நெஞ்சில்	நின்றாய்	போற்றி!
நீறு, செம்,	பசுமை	நிறத்தாய்	போற்றி!
நுண்ணியாய்	அகன்றாய்	ஆழ்ந்தாய்	போற்றி!
நூபுரச்	சீரடி	தருவாய்	போற்றி!
நெற்றிமேல்	ஒற்றைக்	கண்ணாய்	போற்றி!
நேயத்	தேநில்	நிமல	போற்றி!
நைவளப்	பண், பா	நாடினை	போற்றி!
நொந்தவர்த்	தாங்கும்	நோன்தாள்	போற்றி!
நோய், பசி	தீர்க்கும்	தாய்அருள்	போற்றி!
பன்னிரு	திருமுறைப்	பாடலாய்	போற்றி!
பார்த்தனுக்கு	அருள்செய்	பரம்பொருள்	போற்றி!
"பித்தன்"	எனப்பெறு	வித்தக	போற்றி!

பீடெலாம்	கொண்ட	பெம்மான்	போற்றி!
புத்தேள்	போற்றும்	பொன்னடி	போற்றி!
பூவார்	சென்னிப்	புனிதா	போற்றி!
பெருநஞ்சு	உண்டருள்	பெரியோய்	போற்றி!
பேதைமை	அகற்றும்	பிஞ்ஞக	போற்றி!
பைஅராப்	பூண்ட	பரமனே	போற்றி!
பொய்வளர்	நெஞ்சம்	புகாதாய்	போற்றி!
போக்கு	வரவிலாப்	பொருளே	போற்றி!
மதன்படத்	திறந்த	நுதல்விழி	போற்றி!
மாதவர்	மகுடமா	வயங்குவாய்	போற்றி!
மிண்டு	மனத்தரை	விடுவாய்	போற்றி!
மீறிய	புலவோர்	விருந்தே	போற்றி!
மும்மலம்	அறுக்கும்	முக்கணு	போற்றி!
மூவர்	தமிழ்க்கடல்	மூழ்குவாய்	போற்றி!

மெய்கண் டானைஆட் கொண்டனை போற்றி!
மேலவர்க்கு எல்லாம் மேலவ போற்றி!
மையல் கெடுத்தாள் வரதனே போற்றி!
மொழிஅரை யன்கவி முதலே போற்றி!
மோகித்து அணைவார்க்கு ஏகனே போற்றி!
யானை உரிபோர்த்து அருளினை போற்றி!
வங்கக் கடல்நஞ்சு உண்டாய் போற்றி!
வாதவூர் வள்ளல்பா மாந்தினை போற்றி!
வினைகெடுத்து ஆளும் முனைவ போற்றி!
வீட்டின்பு அருள, வல் விமலா போற்றி!
வெண்ணீறு ஆடிய புண்ணிய போற்றி!
வேதமும் அங்கமும் மேயாய் போற்றி!
வையகம் வாழவே போற்றி! போற்றி!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அம்பிகை வணக்கம்





(108 போற்றி)

மெய்கண் டானை ஆட் கொண்டனை போற்றி!
மேலவர்க்கு எல்லாம் மேலவ போற்றி!
மையல் கெடுத்தாள் வரதனே போற்றி!
மொழிஅரை யன்கவி முதலே போற்றி!
மோகித்து அணைவார்க்கு ஏகனே போற்றி!
யானை உரிபோர்த்து அருளினை போற்றி!
வங்கக் கடல்நஞ்சு உண்டாய் போற்றி!
வாதவூர் வள்ளல்பா மாந்தினை போற்றி!
வினைகெடுத்து ஆளும் முனைவ போற்றி!
வீட்டின்பு அருள, வல் விமலா போற்றி!
வெண்ணீறு ஆடிய புண்ணிய போற்றி!
வேதமும் அங்கமும் மேயாய் போற்றி!
வையகம் வாழவே போற்றி! போற்றி!

உ

சிவமயம்


திருச்சிற்றம்பலம்

அம்பிகை வணக்கம்





(108 போற்றி)



உ

சிவமயம்

அம்பிகை வணக்கம்

சிவனார்	மனமகிழ்	தேவி!	போற்றி!
செங்கண்மால்	பின்வரு	செல்வி	போற்றி!
இமவான்	பயந்த	இறைவி!	போற்றி!
இறைவன்	இடப்புறம்	இருந்தாய்	போற்றி!
உமையே	உண்ணா	முலையே!	போற்றி!
உலகெலாம்	ஈன்றருள்	ஒருத்தி!	போற்றி!
தந்தி	முகவனின்	தாயே!	போற்றி!
கந்தனைப்	பெற்றருள்	கன்னி!	போற்றி!
ஞானசம்	பந்தனை	நயப்பாய்	போற்றி!
ஞானப்	பால் கொடுத்து	அருளினை	போற்றி!
ஈசனார்	நெருப்புருத்	தவிர்ப்பாய்	போற்றி!

இடப்புறம்	குளிர்ச்சியை	இடுவாய்	போற்றி!
காலம்	கடந்த	கடவுள்!	போற்றி!
கற்பனை	தாண்டிய	கற்பகம்!	போற்றி!
எழுதாச்	சொல்லின்	எழிலே!	போற்றி!
இகமும்	பரமும்	ஈவாய்	போற்றி'
தோன்றாத்	துணைக்கோர்	துணையே!	போற்றி!
துவாத	சாந்தம்	கடந்தாய்	போற்றி!
மூலத்	தலத்து	முதலே	போற்றி!
முக்கட்	சுடர்க்கு	விருந்தே	போற்றி!
தண்ணார்	தமிழின்	சுவையே!	போற்றி!
கண்ணார்	அமுதக்	கடலே!	போற்றி!
பிறவிப்	பிணிக்கு	மருந்தே!	போற்றி!
பேசா	மறையின்	பொருளே!	போற்றி!
அமிழ்தினும்	இன்மொழி	அருள்வாய்	போற்றி!

தமிழ்க்கடல் மாந்தும் தலைவி! போற்றி!
சிவனை ஈன்றருள் செந்திரு போற்றி!
சிவனார் தந்தநல் திருவே! போற்றி!
அன்றிவ் உலகெலாம் அளித்தாய் போற்றி!
என்றும் கன்னியாய் இருப்பாய் போற்றி!
ஒன்றிய உணர்வோர் உணர்வே! போற்றி!
ஒன்னார் நெஞ்சில் உறையாய் போற்றி!
தெவ்வர் பகைஅடு தேவே! போற்றி!
பவ்வ நெடுங்கடல் படிவே! போற்றி!
பண்ணார் இன்தமிழ்ப் பாவாய் போற்றி!
எண்நான்கு அறமும் வளர்ப்பாய் போற்றி!
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் போற்றி!
விண்ணோர் மிளிர்முடி விளக்கே போற்றி!
புலவர் நாவில் பொருந்துவாய் போற்றி!

புண்ணிய	யோகப்	பொலிவே	போற்றி!
அகந்தைக்	கிழங்கை	அகழ்வாய்	போற்றி!
அற்புதன்	ஆகம்	ஆண்டாய்	போற்றி!
மகிட	முகத்தனை	மாய்த்தாய்	போற்றி!
சகடவாழ்வு	அடு,தையல்	நாயகி	போற்றி!
வினைஎலாம்	கெடுக்கும்	விமலி	போற்றி!
நனைமலர்ச்	சேவடி	நல்குவாய்	போற்றி!
வேத	முடிமேல்	விளங்குவாய்	போற்றி!
நாதப்	பொருளா	நண்ணுவாய்	போற்றி!
கற்றவர்	சுவைக்கும்	கரும்பே!	போற்றி!
அற்றவர்க்கு	அருளும்	அரசி!	போற்றி!
பார்த்தனுக்கு	அருள்செயப்	பணித்தனை	போற்றி!
தீர்த்தன்பின்	வேட்டுருத்	தெரிந்தனை	போற்றி!
பன்றிபின்	பதியொடு	வந்தனை	போற்றி!

குன்றெறி குழவியை ஏந்தினை போற்றி!
செழியர் பிரான் திரு மகளே! போற்றி!
வழுதி நாடு ஆண்ட பெண் மணியே! போற்றி!
உலகினை வெற்றிகொள் ஒண்தொடி! போற்றி!
கலைபல கற்றுணர் காரிகை போற்றி!
சொக்கற்கு மாலை சூட்டினாய் போற்றி!
சொக்கற்கு மகுடமும் சூட்டினாய் போற்றி!
தழைபொருள் தலைவர்க்குத் தந்தனை போற்றி!
தமிழ்அவைத் தலைமையும் தந்தாய் போற்றி!
முழுமுதல் தொட்டநின் மொய்கழல் போற்றி!
விழுமியோர் முடிதவழ் மெல்லடி போற்றி!
கருங்குழல் செவ்வாய்க் கார்மயில் போற்றி!
ஒருங்கிய சாயல் சுருங்கிடை போற்றி!
குவளைக் கண்ணி குரைகழல் போற்றி!

தவள	வெண்ணகைத்	தண்ணளி	போற்றி!
சுரும்பமர்	நறுமலர்ச்	சுரிகுழல்	போற்றி!
துரியம்	கடந்தநல்	சுடர்முகம்	போற்றி!
குழவித்	திங்கள்சேர்	எழில்நுதல்	போற்றி!
முழுதுலகு	அருள்தரு	விழிக்கயல்	போற்றி!
பண்ணமர்	மொழிபகர்	பவளவாய்	போற்றி!
புண்ணியப்	பேறளி	புன்னகை	போற்றி!
துன்னுபொன்	ஆடைத்	தொடித்தோள்	போற்றி!
மின்னிகர்	பொன்கொடி	நுண்ணிடை	போற்றி!
வரதமும்	அபயமும்	வழங்கு,கை	போற்றி!
சரதம்	வீடருள்	தாளிணை	போற்றி!
சிங்கம்	ஏறும்	சேவகி!	போற்றி!
வங்கநஞ்சு	உண்டவன்	மணாட்டி	போற்றி!
மரகதக்	கொடிப்பெரு	மாட்டி	போற்றி!

அம்பிகை வணக்கம்

மாணிக்க	வல்லி!	மாதா!	போற்றி!
அபிடேக	அபிராம	வல்லி!	போற்றி!
அங்கயற்	கண்ணுடை	அம்மை!	போற்றி!
அல்லியங்	கோதை	அலங்கலாய்!	போற்றி!
அபிரா	மித்தாய்	அணங்கே!	போற்றி!
ஆவுடை	நாயகி!	அன்னே!	போற்றி!
ஆளுடை	அம்பிகை	அம்மா!	போற்றி!
ஞானப்பூங்	கோதை	நங்காய்!	போற்றி!
தேனக்க	கொன்றைத்	தெரியலாய்!	போற்றி!
பார்வதி!	பராபரை!	பைரவி!	போற்றி!
நாரணி!	பெரிய	நாயகி!	போற்றி!
அன்ன	பூரணி!	அம்பிகை!	போற்றி!
மன்னுமீ	னாட்சி	மடப்பிடி!	போற்றி!
விசுவனு	தன்மகிழ்	விசாலாட்சி!	போற்றி!

பசுபதி	பங்குறு	பரமேட்டி!	போற்றி!
சக்தி!	கரும்புவில்	தாங்குவாய்!	போற்றி!
பக்தி	வலையில்	படுபவள்!	போற்றி!
வாமனி!	நீலி!	வராகினி!	போற்றி!
கோமள	வல்லி!	கோமதி!	போற்றி!
மயிலே!	அமுதே!	மானே!	போற்றி!
குயிலே!	தேனே!	கொழுந்தே!	போற்றி!
சுந்தரி!	சங்கரி!	சூலி!	போற்றி!
அந்தரி!	சாமளே!	அமலே!	போற்றி!
காமாட்சி!	காந்தி	மதித்தாய்!	போற்றி!
கவுரி!சிவ	காமி!முக்	கண்ணி!	போற்றி!
அன்பெலாம்	ஓருரு	ஆனாய்!	போற்றி!
அவனியின்	அன்னையே!	போற்றி!	போற்றி!

ஸ்ரீ ராமஜெயம்

திருமால் வணக்கம்



(108 போற்றி)

ஸ்ரீ ராமஜெயம்

திருமால் வணக்கம்

அரங்கம்	பள்ளிகொள்	அரியே!	போற்றி!
ஆழ்வார்	அமுதம்	அருந்தினை	போற்றி!
இளையவர்	ஏத்தும்	இராம!	போற்றி!
ஈரடி	மாருதிக்கு	ஈந்தனை	போற்றி!
உடையவர்	போற்றிய	ஒருவ!	போற்றி!
ஊழி	முதல்வ! நின்	ஒண்கழல்	போற்றி!
எட்டெழுத்	தாக	இலங்குவாய்	போற்றி!
ஏனமாய்ப்	பாரை	இடந்தாய்	போற்றி!
ஐந்தலைப்	பாம்பினில்	ஆடினாய்	போற்றி!
ஒருசிறு	குறளாய்	உதித்தாய்	போற்றி!
ஓங்கி	உலகம்	அளந்தாய்	போற்றி!

ஔடதம்	அகப்பிணிக்கு	ஆவாய்	போற்றி!
அஃகி	அகன்ற	அறிவே!	போற்றி!
கல்லுக்கு	உயிர்கொடு	காகுத்த!	போற்றி!
"ங"ப்போல்	அவனியை	நயப்போய்	போற்றி!
சட்டெனக்	கல்மழை	தடுத்தாய்	போற்றி!
ஞயம்சேர்	மொழியருள்	நம்ப!	போற்றி!
மடம்செறி	கஞ்சனை	மாய்த்தாய்	போற்றி!
வணங்கான்	முடிவிழ	வகுத்தாய்	போற்றி!
தடவரை	மார்பனைத்	தடிந்தாய்	போற்றி!
நரனொடு	சிங்கமாய்	நண்ணினை	போற்றி!
பரசி	ராமனும்	பண்ணவ!	போற்றி!
மழிசைப்	பிரான்தமிழ்	மாந்தினை	போற்றி!
உயர்வற	உயர்நலம்	உடையவ!	போற்றி!
அரவர	சில்துயில்	அப்பா!	போற்றி!

பலரா மப்பெயர் படைத்தாய் போற்றி!
வருபரி யாகும் மாதவ போற்றி!
மழவிடை அடர்த்த மைந்தா போற்றி!
ஆளவந் தார்க்கருள் அமர போற்றி!
பிறவிவேர் அறுக்கும் பெருமான் போற்றி!
மீனமாய் வந்த விண்ணவ போற்றி!
கமடமாய்த் தாங்கிய கார்வண போற்றி!
கான்கடல் கடந்த கருணையே போற்றி!
கிராதனைத் தோழனுக் கிளத்தினை போற்றி!
கீதை புகன்றருள் கிருட்டின போற்றி!
குலசே கரப்பிரான் குழைதமிழ் போற்றி!
கூடார் தமைவெலும் கோவிந்தா போற்றி!
கெழுதகை நிலமகள் கேள்வா போற்றி!
கேசவ! இருடி கேசா! போற்றி!

கைதவர் காணக் கார்முகில் போற்றி!
கொண்டல் நிறத்துக் குரிசில் போற்றி!
கோதண்டம் கொண்ட கொண்டலே போற்றி!
சங்கு சக்கரம் தாங்கினய் போற்றி!
சார்ங்கம் கதைவாள் தரித்தாய் போற்றி!
சிவனை வலத்தினில் சேர்த்தாய் போற்றி!
சீதையை மணந்த சீதர போற்றி!
சுக்கிரீ வற்கருள் தோன்றல் போற்றி!
சூடிக் கொடுத்தவள் துணைவா போற்றி!
செந்தமிழ்ப் பாக்கடல் திளைப்பாய் போற்றி!
சேய்,பிர கலாதன் செய்தவ போற்றி!
சையமால் வரையில்நில் தலைவா போற்றி!
சொற்பதம் கடந்த தூமணி போற்றி!
சோர்விலாத் தொல்பதம் தருவாய் போற்றி!

ஞாலம் போற்றும் நல்லடி போற்றி!
ஞிமிறுமு துளவணி நெடுமால்! போற்றி!
ஞேயர்தம் நெஞ்சில் நின்ருய் போற்றி!
தயரதன் செய்தமா தவமே! போற்றி!
தாமோ தர! மது சூதன! போற்றி!
திருவாழ் மார்புறு செல்வா! போற்றி!
தீவினை செறு,திரி விக்ரம! போற்றி!
துரோபதை சோர்வு துடைத்தாய் போற்றி!
தூது நடந்தருள் தொல்லடி போற்றி!
தெரிவை தேவகி சிறுவா! போற்றி!
தேசிகர் கவிநுகர் செவியாய்! போற்றி!
தையல் யசோதை தனையா! போற்றி!
தொண்டர் அடித்திருத் தொங்கலாய்! போற்றி!
தோகை உருக்மிணி தோழா! போற்றி!

நம்மாழ் வார்மொழி நயந்தனை போற்றி!
நாரா யண! நின் நல்பதம் போற்றி!
நின்ருய் இருந்தாய் கிடந்தாய் போற்றி!
நீரிடைத் துயில்கொள் நெடியோய் போற்றி!
நுண் இடைப் பாமைதோள் நோக்கினுய் போற்றி!
நூற்றுவர் ஆற்றலை மாற்றினுய் போற்றி!
நென்னலாய் இன்ருய் நாளையாய் போற்றி!
நேயர்தம் நெஞ்சம் நிறைந்தாய் போற்றி!
நையார் மனத்தையும் நைப்பாய் போற்றி!
நொடியும் மறக்கிலா நோன்தாள் போற்றி!
நோய்இல் வாழ்வுஅருள் நுண்ணியாய் போற்றி!
பத்மநா பா! பரந் தாமா! போற்றி!
பாஞ்ழ் வாரைஆட் படுத்தினை போற்றி!
பிரமனை உந்தியில் பெற்ருய் போற்றி!

பீதக	ஆடைப்	பெம்மான்	போற்றி!
புள்ளரசு	ஊரும்	புண்ணிய	போற்றி!
பூதத்	தார்பாப்	போற்றினை	போற்றி!
பெரியாழ்	வார்தமிழ்	பேணினை	போற்றி!
பேயார்	பாசுரப்	பேழையே	போற்றி!
பைந்தமிழ்ப்	பின்செல்	பரமனே	போற்றி!
பொய்கையார்	போற்றிய	புனிதா	போற்றி!
போதம்	கடந்தநற்	பொருளே	போற்றி!
மங்கைமன்	னன்பா	மகிழ்ந்தனை	போற்றி!
மாயவ!	வைகுந்த!	வாமன!	போற்றி!
மின்னிகர்	பின்னையை	வேட்டாய்	போற்றி!
மீனக்	கொடியனை	ஈன்ருய்	போற்றி!
முனிமண	வாளர்சொல்	முதல்வா	போற்றி!
மூஉலகு	ஆளும்	முன்ஞேய்	போற்றி!

மெல்லியல்	இராதையை	மேவினய்	போற்றி!
மேல்மது	ரக்கவி	விழைவாய்	போற்றி!
மையே!	மழைமுகில்	வடிவே!	போற்றி
மொழிதமிழ்க்	கடலுள்	மூழ்கினய்	போற்றி!
மோகனப்	பாற்கடல்	முகிழ்த்தாய்	போற்றி!
யானைக்கு	அருளிய	வானவ!	போற்றி!
வள்ளல்	தமக்கெல்லாம்	வள்ளால்!	போற்றி!
வாலிக்கு	வீடு	வழங்கினை	போற்றி!
விட்டுணு	எனப்பேர்	விளங்கினை	போற்றி!
வீடணற்கு	அடைக்கலம்	விளம்பினை	போற்றி!
வெண்ணெய்	உண்டசெவ்	வாயனே	போற்றி!
வேய்ங்குழல்	இசைத்த	வித்தக	போற்றி!
வையகம்	உண்டவா!	போற்றி	போற்றி!

— —

ஸ்ரீ ராமஜெயம்

தாயார் வணக்கம்



(108 போற்றி)

ஸ்ரீ ராமஜெயம்

தாயார் வணக்கம்

திருவெலாம் சுரந்தருள் திருவே போற்றி!
திருமால் நெஞ்சமர் திருமகள் போற்றி!
கருமால் மார்பகம் கலந்தாய் போற்றி!
பெருமாள் பிரியாப் பெருமகள் போற்றி!
கருமா மணியின் கண்ணே போற்றி!
ஒருமால் உளமகிழ் ஒருத்தி போற்றி!
திருமா மகள்நின் செவ்வி போற்றி!
ஒருமா மணியா ஒளிர்வாய் போற்றி!
பெருமாள் பேண்பெரு மாட்டி போற்றி!
பிரியாது அவனுளம் பேணுவாய் போற்றி!
வருமாசு அகற்றுசெம் மணியே போற்றி!

மருவாது	இடரெலாம்	மாற்றுவாய்	போற்றி!
அருமா	வினையெலாம்	அழிப்பாய்	போற்றி!
வருமாத்	துயர்களை	மாதா	போற்றி!
இருமாப்	பிறவிவேர்	இறுப்பாய்	போற்றி!
குருமா	மணிநிறக்	கொழுந்தே	போற்றி!
திரைஎறி	பாற்கடல்	செந்திரு	போற்றி!
விரிகடல்	உலகெலாம்	விளங்குவாய்	போற்றி!
பெருமையில்	ஈடிலாப்	பெண்கொடி	போற்றி!
அருந்திறல்	அறிஞரை	ஆண்டாய்	போற்றி!
சரண் உரு	தவர்க்கிடர்	தருவாய்	போற்றி!
மருந்தெனப்	பிணிகொல	வல்லாய்	போற்றி!
பொருந்திய	புலவர் நாப்	புகழோய்	போற்றி!
கரும்பெனக்	கவிஞர்கட்கு	இனியாய்	போற்றி!
நிரம்பிய	புலமையோர்	நினைவே	போற்றி!

தருபேர்	உலகின்	தாயார்	போற்றி!
அருமையில்	அருமையா	அமைவாய்	போற்றி!
பெருமையில்	நிகரிலாப்	பிடியே	போற்றி!
வருபொருள்	யாவும்	வழங்குவாய்	போற்றி!
பெருகிய	அழகுக்கு	ஒருமகள்	போற்றி!
தரித்திரம்	அகற்றும்	தையலே	போற்றி!
முரசதிர்	வாழ்வினை	முழக்குவாய்	போற்றி!
கரையிலாத்	துயர்க்கடல்	கடத்துவாய்	போற்றி!
உரம்கொள	உலகை	உவப்பாய்	போற்றி!
எருதூர்	சிவனுர்க்கு	இளையாய்	போற்றி!
வரை,வில்	வள்ளலின்	தங்காய்	போற்றி!
வரைமகள்	மகிழ்மணி	நாத்தி	போற்றி!
கரிமுகன்	அத்தை,உன்	கழல்இணை	போற்றி!
முருகவேள்	மாமி,நின்	மொய்கழல்	போற்றி!

செருவார்	இராமன்	தேவி	போற்றி!
வருசீர்த்	தயரதன்	மருகி	போற்றி!
தருபுகழ்க்	கோசலை	தனமே	போற்றி!
திருவுறும்	அயோத்திச்	செல்வமே	போற்றி!
அருளுறு	மிதிலை	அணங்கே	போற்றி!
பெருகொளிச்	சனகன்	பெண்ணே	போற்றி!
அருநந்த	கோபன்	மருமகள்	போற்றி!
வருவசு	தேவன்	மகன்துணை	போற்றி!
திருவார்	யசோதையின்	சீர்மகள்	போற்றி!
கருவார்	தேவகி	கருத்தே	போற்றி!
மருள்அறு	செல்வ	மகளே	போற்றி!
பொருகளத்து	அறம்சொனன்	பூவையே	போற்றி!
வருகணன்	மகிழ்உருக்	மிணியே	போற்றி!
தருவை,மண்	கொணர்சத்ய	பாமா	போற்றி!

மருவுசீர் இராதை மங்காய் போற்றி!
பெரும்புகழ்ப் பின்னைப் பிராட்டி போற்றி!
உருகுசீர் அடியார் உணர்வே போற்றி!
பொருகடல் துயில்வோன் பொருளே போற்றி!
உருஎழில் வேளின் ஒருதாய் போற்றி!
மருகியா இரதியை வாய்த்தாய் போற்றி!
பிரமனைப் பெற்றவன் பெண்மயில் போற்றி!
மருமகள் வாணியை மகிழ்ந்தாய் போற்றி!
மருவிய ஆண்டாள் மாற்றவ போற்றி!
தருமனின் மைத்துனன் தாரமே போற்றி!
அருச்சுனன் வலவனை அணைந்தவள் போற்றி!
தரும,மா ருதிக்கு,நாள் தந்தவள் போற்றி!
திரைமீன் வடிவினன் திகழ்பெண் போற்றி!
பருங்கம டப்பிரான் பத்தினி போற்றி!

மருப்புறு	வராகனுர்	மகிழ்பெண்	போற்றி!
நரசிங்	கப்பிரான்	நாயகி	போற்றி!
ஒருகுறள்	ஆனவன்	உத்தமி	போற்றி!
பரசுறும்	இராமனின்	பாவாய்	போற்றி!
நிரம்பிய	இராமனின்	நிழலே	போற்றி!
பெரும்பல	இராமனின்	பெண்மகள்	போற்றி!
பரம்பொருள்	கண்ணனின்	பாரி	போற்றி!
வரு,மா	வடிவினன்	மாதே	போற்றி!
பொருளெலாம்	பூத்திடு	பொன்னே	போற்றி!
வருதொழில்	வளர	வளர்ப்பாய்	போற்றி!
தரைசெழிக்	கப்புரி	தாயே	போற்றி!
அரதனக்	குவியலில்	அண்ணுவாய்	போற்றி!
விரவிய	பொன்மலே	மேவுவாய்	போற்றி!
பெருகியு	வெள்ளியில்	பிறங்குவாய்	போற்றி!

கருகிய இரும்பிலும் கலப்பாய் போற்றி!
வரும்ஏர் உழவர்கை வாழ்வாய் போற்றி!
பெரும்தொழில் வலவரைப் பிரியாய் போற்றி!
தரைமகள் வளமெலாம் தாங்குவாய் போற்றி!
திரைவளம் யாவும் செய்வாய் போற்றி!
வரைப்பெரு வளம்நனி நிரைப்பாய் போற்றி!
மருங்கெலாம் செல்வம் நிரப்புவாய் போற்றி!
அரசனேடு ஆண்டியை ஆள்வாய் போற்றி!
பொருளார் அவனி பூப்பாய் போற்றி!
மருவார் வாழ்வை மாய்ப்பாய் போற்றி!
பெருவாழ்வு உலகுக்கு அருள்வாய் போற்றி!
அருள்பொழி கடைக்கண் அம்மா போற்றி!
வரம்பில்பேர் அழகின் மாமகள் போற்றி!
வரம்தரு பெரும்பொருள் மகிழ்வாய் போற்றி!

கருணையார் கடலின் கருமணி! போற்றி!
பெருமையின் உறையுளாப் பெருகுவாய் போற்றி!
அரசொடு பெருவாழ்வு அளிப்பாய் போற்றி!
வரையிலாச் செல்வம் வளர்ப்பாய் போற்றி!
திருச்செங் கமலத் தெய்வமே! போற்றி!
திருவே போற்றி! செல்வி! போற்றி!
அருள்வாய் போற்றி! அழகே! போற்றி!
வருவாய் போற்றி! வாழ்வே! போற்றி!
கருணைக் கண்மலர் போற்றி! போற்றி!

உ

சிவமயம்

சேக்கிழார் வணக்கம்

உலகெ லாம்உணர்ந்து ஓதினை போற்றி!
நிலவு நீர்முடி நேடினை போற்றி!
அலகில் ஆடலில் அளைந்தனை போற்றி!
மலர்சி லம்படி வணங்கினை போற்றி!
தொண்டர்சீர் பரவும் தூயோய் போற்றி!
தொண்டைநல் நாடளி சுடரே போற்றி!
குன்றத் தூர்வரு குரிசில் போற்றி!
குன்றாப் புகழுடைக் கோமான் போற்றி;
பாலாற் றில்தவழ் பாலா போற்றி!
நூலாறு நீந்திய நுண்ணியோய்போற்றி!
ஆரூர்ச் சிறப்பெலாம் அருளினை போற்றி!

தேரூர் மகன்முறை செப்பினை போற்றி!
சுந்தரன் புகழ்விரி தூவாய் போற்றி!
வந்த பிறப்பை வணங்குவாய் போற்றி!
அநபா யன்அவை அமைச்ச போற்றி!
மநுவாம் வழிமுதல் வழுத்தினை போற்றி!
தொண்டத் தொகைவிரி தூமணி போற்றி!
அண்டர்நா யகன்அருள் ஆண்டனை போற்றி!
அறுபான் மூவர்சீர் அளித்தனை போற்றி!
இறைமணம் கமழ்பா இயற்றினை போற்றி!
திருநீல கண்டனைத் தெளிந்தவ போற்றி!
வரும்இயற் பகைகதை வகுத்தனை போற்றி!
இளையான் குடிநலம் ஏத்தினை போற்றி!
கோவல்மெய்ப் பொருட்குணம் கூறினை போற்றி!
மலைவிறல் மிண்டர்சீர் மடுத்தனை போற்றி!

அமர்நீதி துலைபுகல் அறைகுவாய் போற்றி!
கருவூர்ப் பத்தன் கதைசொல்வாய் போற்றி!
ஏனாதி புராணம் இயம்பினை போற்றி!
கண்ணப் பன்புகழ்க் காதலாய் போற்றி!
கலையனார் காதை காட்டினாய் போற்றி!
மானக்கஞ் சாறர்சீர் வடித்தனை போற்றி!
அரிவாட் டாயர்சீர் ஆய்ந்தனை போற்றி!
ஆனா, யர்குழல் அருந்தினை போற்றி!
மூர்த்தியார் மொய்புகழ் மூழ்கினை போற்றி!
முருகர் புகலூர் மொழிந்தனை போற்றி!
உருத்திர பசுபதி உவப்பாய் போற்றி!
நந்தனார் தந்திறம் நயப்பாய் போற்றி!
குறிப்புத் தொண்டர்சீர் கூறுவாய் போற்றி!
சண்டே சுரர்இசை சாற்றுவாய் போற்றி!

நாவுக்	கரையன்பா	நயந்தனை	போற்றி!
குலச்சிறை	அமைச்சர்சீர்	கூறினாய்	போற்றி!
மிழலைக்	குறும்பரை	விளக்கினை	போற்றி!
காரைக்கால்	அம்மையைக்	காட்டினை	போற்றி!
அப்பூதி	கதைஅமுது	ஆர்ந்தனை	போற்றி!
நீலநக்	கர்கதை	நேர்ந்தனை	போற்றி!
நமிநந்தி	காதை	நல்கினை	போற்றி!
ஞானசம்	பந்தனை	நாடுவாய்	போற்றி!
ஏயர்கோன்	புகழ்க்கதை	ஈன்றனை	போற்றி!
மந்திர	மூலர்சீர்	மாந்தினை	போற்றி!
தண்டி	யடிநலம்	விண்டனை	போற்றி!
மூர்க்கர்	பெரும்புகழ்	முழக்கினை	போற்றி!
சோமாசி	மாறர்சீர்	சொற்றனை	போற்றி!
சாக்கியர்	கல்லெறி	சாற்றினை	போற்றி!

சிறப்புலி சீர்த்தி நிரப்பினை போற்றி!
சிறுத்தொண் டர்புகழ் விரித்தவ போற்றி!
கழறிற்று அறிவார் கதைநனி போற்றி!
கண நா தன்புகழ் கழறினை போற்றி!
கூற்றுவர் புராணம் கொடுத்தனை போற்றி!
புகழ்ச்சோ ழர்புகழ் போற்றினை போற்றி!
நரசிங்க முனையரை நாடினை போற்றி!
அதிபத்தர் காதை அறைந்தனை போற்றி!
கலிக்கம்பர் காதை கருதினை போற்றி!
கலிய நாயனர் கதைசொனய் போற்றி!
சத்தியைப் பாடிய மெய்த்தவ போற்றி!
காடவர் கோன்கவி கருதுவாய் போற்றி!
கணம்புல் லர்கதை காட்டுவாய் போற்றி!
காரி நாயனர் கதைசெய்தாய்போற்றி!

நின்றசீர் மாறனை நிறுத்தினை போற்றி!
வாயிலார் மயிலையை வாழ்த்தினை போற்றி!
முனையடு வார்திறம் மொழிந்தாய் போற்றி!
கழற்சிங் கர்செயல் கண்டவ போற்றி!
இடங்கழி பெருமை இசைத்தனை போற்றி!
செருத்துணை சீர்க்கதை செய்தாய் போற்றி!
புகழ்த்துணை பாதம் பொருந்தினை போற்றி!
கோட்புலி அருஞ்செயல் கொண்டனை போற்றி!
பூசலார் உள்ளம் புகுந்தாய் போற்றி!
மங்கையர்க்கு அரசியை வணங்கினாய் போற்றி!
நேசர்கோ வணக்கொடை நிகழ்த்தினாய் போற்றி!
செங்கட் சோழர்சீர் தேர்ந்தனை போற்றி!
யாழ்ப்பா ணன்இசை வாழ்த்துவாய் போற்றி!
சடையனார் இசைசொல் சான்றோய் போற்றி!

இசைஞானி	அன்னைசீர்	ஏற்றனை	போற்றி!
நாவலூர்	மன் அடி	மேவுவாய்	போற்றி!
பாவலர்	மணிமுடிப்	பாவல	போற்றி!
சைவம்	தழைக்கநில்	தவமே	போற்றி!
தெய்வச்	செழுந்தமிழ்	செய்தனை	போற்றி!
பத்திக்	கடல்குடி	பண்ணவ	போற்றி!
சித்தம்	சிவனுக்கு	ஈந்தனை	போற்றி!
திலக	வதி அருள்	செப்புவாய்	போற்றி!
உலகியல்	கடந்த	ஒருவ	போற்றி!
சாதிச்	சிறுநெறி	தாண்டினை	போற்றி!
போதத்து	உச்சிசேர்	புலவ	போற்றி!
பரவை, சங்	கிலிபுகழ்	பாடுவாய்	போற்றி!
அரனடி	அன்றி	அறியாய்	போற்றி!
மூவர்	தமிழ்க்கடல்	மூழ்குவாய்	போற்றி!

தேவரும்	நுகர்தமிழ்	செய்தவ	போற்றி!
ஞானப்	பிள்ளையை	நண்ணினை	போற்றி!
ஞானக்	கவிபொழி	நாவலை	போற்றி!
நாவரை	யன்திறம்	நாட்டினை	போற்றி!
நாவரை	யன்எனும்	நல்தவ	போற்றி!
திருவா	ரூர்ப்புகழ்	சேர்ந்தவ	போற்றி!
கருவா	ராநெறி	கண்டனை	போற்றி!
என்றும்	இன்பம்	பெருக்குவாய்	போற்றி!
மன்றுளா	டும்அடி	ஒன்றினாய்	போற்றி!
பவப்பிணி	அறுக்கும்நின்	பாத்திறம்	போற்றி!
சிவநெறி	உலகெலாம்	சேர்த்தனை	போற்றி!
தூக்கிய	திருவடி	துலங்குவாய்	போற்றி!
சேக்கிழார்	திருவடி	போற்றி!	போற்றி!

——

